உனக்கு நீயே ஒளியாகிப் போ



Pax Ravichandra
pax.ravichandra@gmail.com

11-2-2024

அப்போ தீப பவ

உனக்கு நீயே ஒளியாகிப் போ




மாயா தேவி



எண்ணித் தவிக்க அழகோ காதல் நந்தவனம்
ஏங்கித் தவிக்க இளையவளோ அழகின் அற்புதம்
கண்கள் இரசிக்க ஐம்பூ விளையும் அமிர்த நிலம்
கம்பனும், காளிதாஸனும் பாடாத கவிதையினம்

பொய்கையில் பூத்த பங்கயமோ?-மடந்தை
உவகையில் பிரம்மன் படைத்த பேரெழிலோ?
இசைதான் மொழியோ-இதழ்தேன் மாங்கனியோ?
பணைஇள வனமுலைகள் செங்கலசங்களோ?

இடை மின்னலோ, நடை அன்னமோ?
செங்கயல் நெடுங்கண் அஞ்சண விழிகளால்
கொல்லும் வஞ்சிமகள் காமண் கணைதானோ?
என்னை ஆட்கொண்ட தேவதை இவள்தானோ?



கார் குழலோ கொட்டும் மலையருவி
மையெழுதிய கருவிழிகளோ காமனின் கருவி
செவ்வாயில் தேன்சுவை-சுத்தோதனன்
தேவியோ திகட்டாத காதல் அவை

காதலின் கற்பக தருவோ?
அழகின் அட்சய பாத்திரமோ மங்கை?
காமத்துப்பால் தரும் காமதேனோ-
காதற்கோட்டத்தின் தேவதையாய் நங்கை?

பூவே பூச்சூடிய அழகாய் கார்குழலில் பூவனம்
வட்ட நிலவிற்குப் பொட்டுவைத்த அழகாய்
வண்ணக் குங்குமம் சூடிய பெண் மனம்
என்னை ஆட்கொண்ட காதல் தேன்வனம்

குவளைப் பூ விழிகளில் காதல் கும்மி கொட்ட
செம்பவள இதழ்களில் தேனருவி சொட்ட
ஆனிப்பொன்மேனியில் அழகின் திருவிழா
காதலர் வாழ்வில் நாளும் காமன் பெருவிழா

மையிட்ட விழிகள் நெய்யிட்ட சுடராக, பொட்டு வைத்த
மதிநுதலும் , பூ மலர்ந்த கார்குழலும் நட்சத்திர வானாக
தூக்கத்திலும் பூங்கொடி பூத்த பூவனம்-வான் நிலவும்
காதல் கொள்ள-சுந்தரி வற்றாத காமத்துப்பாலின் நறுமணம்




தேவமங்கையரும் காமுறத் திருமகளின் பேரழகு
படைத்த பிரம்மனும் மயங்கிட்ட தேன்நிலவு
கண் மயங்க கன்னியோ காதல் தேவதை
செவி இனிக்க மொழியே தேன்வதை

இதழ் சுவைக்க செவ்வாயில் மதுச்சுவை
எண்ணிச் சுவைக்க மனதில் இனிக்கும் அமுதச்சுவை
பூவையோ வாசமலர்களின் பேரவை-நாளும்
காதலால், என்னை ஆளும் அழகின் திருச்சபை

மெய் சிலிர்க்க இவள் அணைப்பிலும்
அணையாது வளரும் காதல் தீ
எரித்தும் எரியாது என்னை மகிழ்விக்கும்
என் காதல் யாகத்தின் வேள்வித் தீ

மஞ்சத்தில் பூத்த தாமரையாய் மகாராணி மாயாதேவி
அயர்ந்துறங்க, தென்றலும் தழுவி இன்புறும் வாசமலர்,
தேன்நிலவும் மயங்கிடும் அல்லி மலர், மன்னனையும்,
மனமதனையும் வாட்டிடும் காதல் மலர்

கனவிலே தேவிக்கு அழகிய காட்சி
வெள்ளை யானை உதரத்தில் குடிவந்த மாட்சி
தாயாகிப் பிள்ளையை சீராட்டும் உவகை
தாய்மையே பெண்மையின் ஈடில்லா மேன்மை



கனிந்த தாய்மை, தாய் வீடு செல்ல, வழியில்-களைப்பாற
லும்பினித் தோப்பில் இளைப்பாறி உலாவிட-மாதா
பற்றிய சாலமரக்கிளை உயர்ந்து மகிழ்ந்தே
மலர்களை உதிர்த்து வாழ்த்திட பிறந்த குழந்தை

பிரசவ வலியின்றிப் பரவசமாகப் பிறந்த குழந்தை
ஈன்ற தாயும் வியந்திட-பிறந்தவுடன்
அடியெடுத்து நடந்த விந்தை
தாய் மனதிலோ பொங்கும் பூம்புனலாய் உவகை

அவதாரமாய் இவர் பிறப்பு-மானுடம்
உய்வுற இவர் அழைப்பு

பெருமானை ஈன்ற தாயும் இனியொரு பிள்ளைக்குத் தாயாவதில்லை
என்றே, தங்கை பிரஜாபதியை மன்னனுக்குத் தாரமாக்கி,
குழந்தைக்குத் தாயாக்கி கண் மறைந்தார், தாரமான மங்கையும்
குழந்தைக்கு நற்தாயாகி வாழ்வில் பேரின்பம் கண்டார்



காலைப்பனியில் நீராடிக் கண்விழித்த செந்தாமரை
மாலை சூடி மணாளனைக் கொண்டாடிய தேன்மழை
மழலை சூடி என்னைத் தந்தையாக்கிய தாய்மை
மாலை வருமுன் வாடி உதிர்ந்த அம்மை

துணையை இழந்த கோகிலாமாய் வருந்தி
நின்றான் மன்னன் -தாயை இழந்த கன்றாய்
வாடி நின்றார் கபிலவஸ்து மக்கள்

சோதிடர் கணிப்பு

ஜாதகம் கணித்த எட்டுச் சோதிட மேதைகள்
கோமகனும் பாராளும் மாமன்னராவார்
மூப்பு. பிணி. சாவு கண்டால்-இளங்கோ
முற்றும் துறந்து ஞானியாவார் என்றார்




வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வான் புகழ் எய்திய ஞானியர்
“புத்தர்” பிறந்ததை மகிழ்ந்து கொண்டாட, ஆனந்த எதிரொலி
அசிட்ட மா முனியின் செவிக்கும், மனதுக்கும் அமிர்தமானது,
குழந்தையின் பிறப்பிடத்தை அறிந்திட ஞானதிருஷ்டி வரமானது

அங்கலட்சணங்களை ஆய்ந்தவர், அற்புதனோ ஞான அவதாரம்,
பெருமானே-உன்னைப் பூஜிக்க கிடைத்தது என் பாக்கியம்
பக்தியோடு பாத பூஜை செய்த முனி, பெருமான் போதனைகளை
கேட்க முதியவன் எனக்கு வரமில்லை என அழுத ஞானி

தர்மமே இவர் பாதை–ஞானமே இவர் கீதை
ஞான புத்தர் இவரே என்ற பெரியார்

கோமகனும் வளரக்-கொற்றவனும்
மூப்பு. பிணி, சாவு காணாது-இளங்கோ
முப்பொழுதும் இன்புற்று-ஆனந்த
சொர்க்கத்தில் வாழ வழிசமைத்தான்

மாறிடும் பருவ காலங்களில் வாழ
பார்த்தோர் வியப்புற-அழகிய
மாளிகைகள் மூன்றமைத்தே-மகன்
வாழ்வில் துன்பத்தை மறைத்தான்




ஆய கலைகள் அனைத்தும் கற்றுத் தேற அரிய
பல ஆசான்கள், இளமையும், கல்வி, கேள்வி, வீரம்
என வேள்வியாய் மாற இளங்கோ அறிவிலும்,
சீலத்திலும், பிராயத்திலும் வளர்ந்திட மாறும் காலங்கள்

உலகாளும் சக்கரவர்த்தியாய் -மகன்
உலாவரும் நாள் காண அரசனும்
கனவு கண்டான்-மனதில் சக்கரவர்த்தியின்
தந்தை நான் எனப்பேருவகை கொண்டான்

இளவலோ இளமையிலே தனித்திருந்தார்-
எப்பொழுதும் தன்னில் விழித்திருந்தார்
ஞானப் பசி எடுக்க-நாளும்
தியானத்தில் நிலைத்திருந்தார்


காதல் மகாராணி- யசோதா



சீலமும், வீரமும், ஞானமும், கருணையும் காளையின்
கட்டுடலுக்கு மெருகூட்ட-கண்பட்டு காதலாகிப் புண்பட்ட
கன்னியரோ மெல்லினம்- பூங்கொடி, மாதர் வேல்விழி பட்டும்
காமத்தால் புண்படாத தவசீலன் நெஞ்சமோ வல்லினம்

கற்பு நெறி தவறாத கோமகன்-நெஞ்சில்
காதல் தென்றலும் கன்னி யசோதரா வடிவில் வீசிட
கண் பார்க்க நாணி-மண்பார்த்த நங்கை
விண்பார்க்க, வியந்து என்னைப் பார்த்த மங்கை

காளையும் நோக்கிட, கயல்களும் நோக்கிட
கண் பார்த்து நெஞ்செழுதிய காவியமாய்க் காதல்
கயல் விழித் தூண்டிலில்-காளை நெஞ்சமும்
கயலாய் சிக்கி காதலாகிச் சொக்கிட இன்ப ஊடல்



செங்கமலமோ, பௌர்ணமித் திங்களோ முகம்
தேனோ? கனிரசமோ? செவ்வாய் சிந்தும் மொழி ரகம்,
விழி கயல், விரிகுழல் பூவனம், கொடியிடை, மேகலை
சினுங்க, செவ்வாயில் முத்துப் புன்னகை

பிறை நுதல், பூங்கரம், வெண்சங்குக் கழுத்து,
மூங்கில் தோள், செங்கலச கொங்கை- ஆனிப்பொன்மேனியில்
அழகின் நர்த்தனம், காமனையும், முனிவனையும் வாட்டும்
கன்னியோ அழகின் பிரம்மாஸ்திரம்

கண் பார்த்து மனம் ஏங்க
கன்னியோ காதலின் கங்கோத்திரம்
இவளின்றி வாழ்வில்லை-காளையர்
காதலாகி புண்பட்டு ஓதும் காதல் மந்திரம்

காதலைப்போல் இன்பமில்லை, காளை இதயம் களிக்க
கன்னி மேனி வண்ணம் சிவக்க, விழிகள் தழுவி மார்பு விம்ம,
விரிந்த மார்பபைத் தழுவ உயிர் துடிக்க, துடிக்கும் இமையும்
அழகை மறைக்க, வாட்டும் காதலின் கொடுமையும் இனிமை



பொங்கும் காதல் உள்ளங்கள்
கடலும், நதியுமாய்ச் சங்கமாகத் தவிக்க
காதலோ தேனிலும் இனிமை
நாணத் திரையிட்ட பெண்மையோ மென்மை



அணைக்க அணைக்க அணையாமல்
வளரும் காதல் தீயும் தீய்க்காத மேன்மை
பேசத் தவித்து பேசிய -காதல்
மொழிகளோ கம்பனும் பாடாத கவிதை

பார்க்கத் தவித்துப் பார்த்த விழிகளிலோ
தேனிலும் இனிமை, தெவிட்டாத இளமையோ
பசுமை, கொல்லும் அழகடி நீ-என் நெஞ்சை
கொள்ளையிட்ட அழகும் நீயடி-கவிதை

கண்டு ரசிக்கத் தேவதையாய்-கேட்டுச்
சுவைக்க கனிமொழியும் மலைத்தேனாய் இனிக்க,
மலைத்தேன் நானடி என் உயிர்த்தேன் நீயடி
காதலன் நான் பாட என் காதல் கவிதை நீயடி

முழுமதியாய் முகவழகு, முக்கனிச் சுவையாய் செவ்வாய் இதழமுது,
அஞ்சன விழிகள் நெஞ்சில் காதல் கோலமிட, அழகுச் செவ்வாயில்
முத்தப் புன்னகை அருந்து, காதலுக்கு அருமருந்து, தூது விட
காதலால் கொதித்த நெஞ்சம் கன்னியிடம் கோரியதோ காதல் தஞ்சம்.



துடிக்க மறந்த இதயம், காதல் ரீங்காரம் இசைக்க
இமை துடிக்க வண்ணக் கருவிழிகள் நாணி மண் பார்க்க
நாணிச்சிவந்த கன்னங்களோ கிண்ணம் பழங்கள்
வாசமுல்லையிலோ வற்றாத காதலின் நறுமணங்கள்

கயலோ, வேலோ எனும் விழிகள் என்னை வீழ்த்த- பாலோ,
தேனோ, பழரசமோ என்னும் இதழ் சுவைகள் காதல் பசி மூட்ட
அன்னமும் நடை கண்டு மயங்கும், அழகு மயிலின் சாயலில்-
கலாபமயிலும் தோகை விரித்தாடி காதலால் உயங்கும்

கண் பார்க்க அழகின் காட்சி பேரின்பம்-மொழி கேட்க
கனிமொழியோ இசையின்பம்-பூமேனி மணக்க
சுவாசத்திலும் பூவாசம், அணைத்து மகிழ-நெஞ்சில்
அணையுடைக்கும் காதலோ பேரின்பம்.





அணைக்க அணைக்க வளரும் காதல் தீ-ஐம்புலன்களையும்
ஆறாம் அறிவையும் வியக்கவைக்கும் வேள்வித் தீ
காதல் இதயங்களோ ஆகுதி, காமனை வெல்ல
என்னை ஆளும் காமினியோ என் வானத்து காதல் மதி

பெண்பால் இவளோ இன்பத்துப்பால்
அன்பால், ஆண்பால் அருந்திடத்-திகட்டாத
காதல் விடாய் தணிக்கும் காமத்துப்பால்
பண்பால் என் உள்ளம் கவர்ந்த பெண்பால்

வண்ணம்தான் பொன்னைச் சொல்ல-வாசம்தான் மலர்வனத்தைச்
சொல்ல, பன்னம்தான் கொடியுடலைச் சொல்ல-இதயம்தான்
பூங்கொடி உன் கொழுகொம்பு நான் எனச்சொல்ல-தேனாய்
இனித்து, பூவனமாய் பூத்துக் குலுங்கும் என் இதயம்

சந்தனச் சிலையை ஆரத்தழுவிட என் மேனியிலும் மணக்கும் சந்தனம்,
செவ்வாயில் அமுது பருகிட-மொழியிலே காதல் கீர்த்தனம்
நடையிலே நாட்டியம்-கொலுசிலே காதல் கட்டியம்
தேன் மொழியிலே நாதஸ்வரம், வாழ்விலோ காதலின் சப்தஸ்வரம்






மோகன இடையிலோ மணிமேகலை, காவிய நிலையிலோ
கம்பனும் பாடாத மைதிலியின் திருநிலை-இவளின்றி
வாழ்வில்லை-நம் காதலுக்கு வானமே எல்லை
கூடிக் கவி பாடிய காதல் மனம், சோடிக் குயில் இனம்

வண்ண நிலவோ, வாச மலரோ-உள்ளம் துள்ளி
மகிழச் சிந்து பாடும் கானக்குயிலோ கன்னி,
காளை மனம் ஆனந்தக் கூத்தாட-காதலால் என்னைக்
கொள்ளை கொண்ட தோகை மயிலோ தேவதை

பொற்புடை கோவும் காதலாகி -கற்புடை
பேரழகுக் கன்னி யசோதாவை-விற்திறன் காட்டி
போட்டியில் வென்றிட, இரு மனம் ஒன்றான
இன்பச் சங்கமம் காதலர் திருமணம்.

நெஞ்சில் மலர்ந்த காதல் தாமரையை -காதல் வண்டு
மஞ்சத்தில் உண்டு சுவைக்க பிறந்த பிள்ளைக் கனியேமுதோ
ராகுலன், என்னைத் தந்தையாக்கிய தாய்மை
என்னை ஆட்கொண்ட பெண்மையோ மேன்மை




தரிசனம்

ஊர் அழகு காண ஓர் நாள்-கோமகனும் ஊர் வலம் சென்றார்
மூப்பு, பிணி, சாவு காணாது, ஊர்வலம் செல்லத், தந்தை
செய்த ஏற்பாடோ வலிய விதிக்கு நூல் வேலியானது,
துன்புறும் உலகிற்கோ மகத்தான ஆசீரானது.

மாணிக்கத்தேரில் கோமகனும் ஊர்வலம் வர
முடி நரைத்து, உடல் தளர்ந்து விழிகள் மங்கி,
கோல் பிடித்து கூனிய தோற்றம் கண்டார்
மூப்பின் கொடுமை அறிந்தார்

பிணியுற்று, பேச்சிழந்து, மூச்சிழந்து-ஈக்கள் மொய்க்கத்
தெருவில் நாறிக் கிடந்தவரையும் கண்டார்
நமனை அழைக்கும், நோயின் கொடுமை அறிந்தார்
நலமும் நாளும் மாறும் பருவம் தெளிந்தார்

ஒப்பாரியும், புலம்பலும் சோகம் சொல்ல
ஊரார் பின் செல்ல, காடு நோக்கி
பாடையில் போகும் பிணத்தையும் கண்டார்
இப்பாரினில் வாழ்க்கை நீர்க்குமிழி என அறிந்தார்



காணக் கூடாததைக் காட்டிய விதி வலிதே
எண்ணிக் கலங்கிய தேரோட்டி சனா,
இளமையும், முதுமையும் அழகும் மாயையே
மாறுபடும் உலகில் நிலையானது ஏதுமில்லை

பிறந்தவர் இறப்பதும், இறந்தவர் பிறப்பதும்
வாழ்வின் நியதி , மூப்பு, பிணி, சாவோ
முப்பருவமாய் உடலுக்கு வரும் நீதி, வலிது,
வலிது விதி வலிது, வாழ்வு கொடிது என்றார்



மூப்பின் தோற்றம் நெஞ்சைக் கொல்ல, பிணியின் வேதனை
மனதை மெல்ல, சாவின் துயரம் உண்மையைச் சொல்ல
காணாததைக் கண்டு கலங்கிய நெஞ்சம்
காவியணிந்த துறவியில் அமைதியின் தஞ்சம்

மெய்யழகும் பொய்யாக, இளமை வெறும் கனவாக
நரை, திரையாய் வரும் மூப்பு- கொல்லும்
நோய் வர நேரமில்லை-நோயுறாத உயிருமில்லை
சாவை வென்ற அமரர் யாருமில்லை

மரணமே மானுடருக்கு முடிவான எல்லை-உயிர் மெய் வருத்தும்
பிணிக்கு மருந்தாய் சஞ்சீவினி இல்லை-முடிசார்ந்த மன்னனும்
முடிவில் பிடி சாம்பலாவதே உண்மை, வாழ்வோ நீர்க்குமிழி
மெய்யோ காற்றடைத்த பொய் மரணமோ அச்சுறுத்தும் மெய்



பிரிவு

எட்டாத வானிலே முழுநிலா
எட்டிய மலர் மஞ்சத்திலோ காதல் தேன்நிலா
நித்திலமோ நான் சூடிய பெண் நிலவு-காவலன், மகவையும்,
காதல் மனையாளைப் பிரியும் நாழிகையோ நள்ளிரவு

கண்ட காட்சிகளோ நெஞ்சைத் தீய்க்க, பஞ்சைத் தீய்க்கும்
நெருப்பாய் நினைவை வருத்த, உண்டு, குடித்து,
உறங்கி எழுந்து, கலவி செய்து உறவு வளர்த்து
பிணியால் வாடி, முதுமையால் வருந்திப் பிணமாகும் வாழ்வு



எண்ணிய நெஞ்சிலே இமயப் பாரம், கலையும்
கனவாய் வாழ்வு, நூலறுந்த காற்றாடியாக வரும் சாவு
மீண்டும், மீண்டும் பிறந்து இறந்து வாழும் வாழ்வில்
மூப்பு, பிணி, சாவோ மாறாத ஊடும், பாவும்

இனம்புரியாத வெறுமை இளநெஞ்சை ஆட்கொள்ள
எல்லாம் மாயை என்ற உண்மை இமயச் சுமையாக
போகமான வாழ்வும் கொடுஞ் சிறையாக-எல்லாமிருந்தும்
எங்கே அமைதி எரிநரகாய் மனதை வருத்திய கேள்வி

அமைதிக்காய் ஏங்கித் தவித்து துடித்தாலும்
இதயத்திற்கு அமைதியோ கானல் நீர்,
வருவதும் தெரியாமல், போவதும் அறியாமல்
எங்கோ மிதந்து போகும் மேகங்களாய்-வாழ்வு

மீண்டும், மீண்டும் பிறந்து இறந்து-இன்ப துன்ப
இருமையில் உழலும் வாழ்வு வெறும் கனவே-வீடு
செல்லும் பாதை அறியாத வாழ்வு பெரும் துயரே,
தூங்கியது போதும், கனவில் நின்று விழித்தெழு

வானவர் பாடலால் விழித்த மனம், தேடல் தொடங்கிட
களித்த வானவர் இனம், கலைந்த பூங்கோலமாய்-வாயில்
நீர் வடியக், கலிங்கம் குழைய உறங்கிடும் சேடியர் குழாம்
நிஜத்தை சொல்ல, ஊனழகின் பொய் கண்டார்

கனிமொழி கேட்டு இனித்த காதல் நெஞ்சம், மழலை மொழியில்
மகிழ்ந்த தந்தை உள்ளம், இன்னிசை கேட்டு இன்புற்ற செவிகள்-
வசை கேட்டாற்போல் வாடிட ஓயாத குறட்டை
வாயில் நீர் வாடிய, தூங்கும் சேடியர் குழலோ பறட்டை



ஏந்தும் இளமுலையாள், இன்னுயிரும்
ஏந்தி கொஞ்சி மகிழ்ந்த மழலையும் உறங்கிட
போர்த்திய பூந்துகிலும் வேறாகக்-கண்ணில்
நீரொழுகப் பார்த்து நின்றார்

கண்ணிலே கங்கையை வைத்து, காங்கையைத் தலையில்
வைத்து, கருணை உள்ளத்தில் காதல் வைத்து
தந்தை எண்ணத்தை நெஞ்சில் வைத்து-
பிரிவதா இல்லையா எனத் தவித்த குணாளன்



கைத்தலம் பற்றிய மனையாளும்,
காதல் பரிசான மகவும் அயர்ந்து உறங்கையில்
மணிமுடியும், அரியணையும் துறந்து
மகத்தான வீட்டைத் தேடலாக்கிய மனிதன்



கோமகன் திருமடந்தை-கொற்றவரும் பெற்றிலா மணமாலை
கோவுக்கிட்ட மங்கை நெஞ்சத்தில் தன்னை வைத்தவன்
நெருக்கத்தில் உறங்குகிறான் என்ற மகிழ்வோடு
மஞ்சத்தில் மகவோடு உறங்கிடும் நங்கை

மன்னவன் நெஞ்சை எரிக்கும் கொடுந்தீயோ மணாளன்
தூக்கத்தை கலைத்து, துக்கத்தை வளர்ப்பதை
அறியாத மங்கை, பல்கலையும் கற்ற மடந்தை
மெய் மறந்து மகவோடு உறங்கிய குலமங்கை

அன்புறவுகள் ஆழ்துயில் கொள்ள-தூக்கம்
துறந்த நெஞ்சைத் துக்கம் ஆட்கொள்ள
அஞ்சுகத்தையும், குஞ்சையும் பிரிந்தே-
நள்ளிரவில் மெல்லப் பறந்த காதல் கிளி

சொல்ல மொழியின்றி நாக்குழற, மெல்லவே எடுத்த அடியில்
கால்களும் இடறப், பார்த்த கண்களும் பனிபூத்துக் கலங்க
கணவனும், காதலனும், தந்தையுமானவன் கள்வனைப்போல்-
மகவையும் காதலையும், மணி முடியையும் துறந்த நேரமது



பரியேறிச் சனாவோடு பார்த்தீபனும் நாடு கடந்தார்-விடியலில்
நீண்ட சிகை அறுத்துக்- காவியணிந்து , விடை பெற்றார்
வீடு காணும் வரை தேடல் ஓயாது விடிவு காணும் வரை
மனம் தூங்காது விடை காணத் தனியே தன் வழி சென்றார்

வாழ்வு தேடலாக-வழியறியாத நதி கடலைத் தேடும்
நெடும் பயணமாக, மேடு கடந்து பள்ளம் வீழ்ந்து ஓடி
சுயமழிய மெய்தேடும் ஞானயாத்திரை
சூனியமே புத்த நிலை, மானுடத்தின் மெய் நிலை

சோகம்

மணாளன் சென்ற சேதியை சனாவும் உரைக்க
மங்கையின் கண்களிலோ பாயும் கங்கை
மனதினிலோ குமுறி விழித்த சோக எரிமலை -நஞ்சான
சேதி, காதல் அமுதும் விஷமாக விதியின் கோரச்சதி

நீல நயனங்கள் கண்ணீரில் நீந்திக் களைக்க-கோலமயிலின்
இதயம் விம்மித் துடிக்க, குழைந்தே குயிலாய்க் கண்ணாளனை
கூவி அழைத்தாள்- ஜோடிக்குயில்களாய் பாடிய காலம் கனவாக
ஒற்றைக் குயிலாய் கரையும் காலம் நிஜமாகத் பூங்கோதை தவித்தாள்



மையெழுதிய விழிகளில் அருவி பொங்க
மெய்தழுவிய கலிங்கம் புழுதியில் அலைய
நெய்யின்றி, மலரின்றிக் கார்குழல் வாடிக் கலைய
மெய்யெழுதிய அழகும் குலைய வாடிய பூவை

நீலவிழிகள் நெகிழ்ந்து மலர, கோலமலர்க் கொடியிடையும்
மெலிய, வாழ்வு தந்த காதல் கணவனைக் கண்டிரோ
குயிலே, கலாப மயிலே எனக் கூவி
எரிகொள்ளியில் விழுந்த எறும்புபோல் துடித்தாள்

அஞ்சணவிழிகளில் அருவி பாய, மலர்ப்பஞ்சணையும்
அனல்போல் காய, கைத்தலம் பற்றிய கணவனைக் காணாமல்
வான்மதியே! என் வானத்து மதியை கண்டாயோ, பூங்குயிலே!
என் ஜோடிக் குயிலைக் கண்டாயோ கதறிய காதல் மடந்தை



புயலழித்த பூவனமாய் பூ மனம் வாட,
சோக வாள் பாய்ந்த நெஞ்சிற்கு சுகமளிக்க
ஈன்ற செல்வத்தின் மழலை இன்னிசையாக
தன் துயர் மறந்து தாயான தாரம்

பொன் மேனி வாடப், பூங்குழல் மலரின்றிச் சோர
நீர் சிந்திச் சேல் விழிகள் சிவந்து நோக
முத்தச்சுவை காணாது வரண்ட செவ்விதழ்
புலம்பும் பெண்மையோ ஒற்றைக் குயில்



பொன் மறந்தாள், பூ மறந்தாள், வண்ணப்பட்டும்
வாசச் சந்தனமும் துறந்தாள், தன்னை மறந்து
கண் மறைந்த காதலனுக்காய் அறுசுவையும், ஆடலும்
துறந்த வண்ணமயில், பாடலும் மறந்த கானக்குயில்

ஆறாத் துயர் பூ நெஞ்சை நொருக்க
அலையலையாய் விழியிரண்டில் கண்ணீர் படையெடுக்க
பொன்மேனியும், வெண்ணாடையும் புழுதியில் புரள
மழலையை மார்போடணைத்து விம்மிய தாய்மை



காரிருளில் மாளிகையில் கைபிடித்த மனைவியையும்,
பெற்ற மழலைச் செல்வத்தையும் துறந்து-சோர்
துயிலில் நீத்தல் முறையோ? மனங் குமுறினாள்
சொல்லாமல் போனதும் சரியோ? விம்மி அழுதாள்

மங்கை மனதில் சோகச் சுனாமி பொங்கிட
கண்ணாளன் போன காரணம் யாதென ஐயுற்று
சொந்த பந்தங்கள் சுற்றி நின்று புலம்புவார்
வெந்தபுண் ஆற இறைவனை வேண்டுவார்

எண்ணிட உன்னைத் தவிர-வேறு எண்ணமில்லை
ஏந்திழையாள் உள்ளத்தில், உருகிப் புலம்பிட
என் சொர்க்கத்தில் நீ தந்த சோகமன்றி வேறில்லை
கானம் மறந்து ஒற்றைக்குயிலாய்க் கரைந்த குயிலால்

பாட்டும், பரதமும் துறந்த அழகு மயிலால்
அன்ன நடை மறந்து ஆறாத் துயரால் மெலிந்தாள்
வண்ணப் புன்னகை மறந்தாள், மழலை மொழியில்
மெல்லத் தன் துயர் மறந்தாள் காதல் தேவி

அற்றதுகிலும் ஆறாய் ஒழுகும் கண்ணீரும்
இந்துமதிக்குச் சொத்தாக-காதல் சிந்து கேட்க
ஏங்கும் நெஞ்சம்-வான் நிலவு கண்டு
தனியே வாடும் மஞ்சம்.

குழந்தையும் தந்தையைத்தேட
குமுறியே மனம் கண்ணீர் சிந்தி வாட-
காதல் துணையைக் காணாமல் கரையும் நெஞ்சம்
கசங்காமல், கலையாமல் கிடக்கும் பூமஞ்சம்





பூத்துக் குலுங்கும் உன் வாசமுல்லை
கொழுகொம்பு இன்றிப் புழுதியில் தவிக்க
கண்ணாளனே எம்மைக் கைவிட்டது முறையோ?
காரிருளில் கள்வனைப்போல் பிரிந்தது அறமோ?

உன்னைக் காணாமல் வாடும் என் கயல்கள்
உன் மொழி கேளாமல் தவிக்கும் செவிகள்
உன்னைத் தழுவால் கொதிக்கும் பூ நெஞ்சம்
நீயின்றிப் பாழாகும் நம் மஞ்சம்

மழலை முகம் கண்டு மொழி சுவைக்க
தந்தையாய் வாராயோ-பட்டுப்போகும்
மங்கையின் நெஞ்சமும் துளிர்க்க-பருவ
மழையாய் காதல் மழை பொழியாயோ?

நெஞ்சால் நினைக்க உன்னையன்றி
எனக்கு யாருண்டு? -நங்கையும் என்னை
நஞ்சால் மறப்பாளோ என்றெண்ணி
எனக்கோர் மகவை ஈந்தாயோ என் கோவே?

கண்ணாளனை நினைந்து உருகினாள் -வான்மதியே,
நெஞ்சுருக நிந்தன் காதல் மதி தேய்வதைக்
காரிருளில் கைவிட்ட காதல் மணாளனிடம் ஓதுவீர்-
என் சோகம் சொல்வீர் புலம்பினாள்

ஒற்றைக் குயிலாய் கரைகின்றாள்
உந்தன் ஜோடிக்குயில் எனக்-கானக்குயிலே
கரைந்தே என் சோகம் சொல்லுவீர்
விரைந்தே வீடு வரச் சொல்லுவீர்

வான் மதிக்கோ ஒரு நாள் அமாவாசை,
வதிக்கோ வாழ்நாள் எல்லாம் அமாவாசை




மங்கை அழக்கண்டு-மனமுருகி வானும் மழையாய்க்
கண்ணீர் சிந்தியழு, கானக்குயிலும் தனியே கரைந்தழ,
கருவான் நிலவும் முகம் மறைத்தே துயர் உரைத்ததே
அலையும், கரைமுட்டி கண்ணீர் சிந்தி அழுததே!

வான்மதியும் சித்தார்தனை வாட்டியது
யசோதரையின் தேய்பிறை முகம் காட்டி
தேன்மலரும் வருத்தியது செவ்விதழ் சுவை சுட்டி
கானக்குயிலும் கரைந்தது சோக இசை மீட்டி

இளையாள் முகமும், ஈன்ற செல்வமும் நெஞ்சைத் துளைத்து
நிலைத்த கணைபோல் வருத்த, மூப்பு. பிணி, சாவின்
முடிவற்ற துன்பநிலை இதயத்தை இமயப்பாரமாய் அழுத்த
விடை காணும் வரை என் வாழ்வில் இன்பத்திற்கு இடமில்லை

அமைதியிழந்த இதயம் அமைதியைத் தேடி அலைந்தது
நெஞ்சில் உறுதி பூண்டு, நினைவில் துறவு பூண்டு
காடு, மேடு, நாடு நகரம் கடந்து தவசீலரோடு உறவாடி
சத்தியத் தேடலைத் தொடர்ந்தது

உள்ளுணர்வின் உன்னதத்தை அனுபூதியில் அறியாமல்
வெளியே தேடிய பயணம் கானல் நீரானது
கடந்து உள்ளே செல்லக் காலம் கனிந்திட
விடை பகிராத உலகோ வேம்பாய்க் கசந்தது



தேறுதல்

முத்துப்பல்லழகி, -வாசமல்லிகையும், முல்லையும்
சூடும் பேரழகி, கண்விழித்து கணவன் என்னைத் தேடினாள்
காற்றே, கதிரே, கருவான் நிலவே, மலரே தேற்றுவீர்
என் கண்மணி துயர் போக்குவீர்



வான்மதியே, வண்டமர்ந்த செந்தாமரையே, கானக்குயிலே-
பூங்குழலி கண்விழித்து-கண்ணாளன் என்னைத் தேடினாள்
தேற்றுவீர் என் காதலை, தேறுதல் கூறுவீர் -உயிரான
உறவுகளைப் பிரிந்த உறவின் பயணமோ சத்திய யாத்திரை

இந்துநுதலி எழில் நோக்கிட-அன்று
இதயம் காதல் சிந்து பாடும்
இந்துநுதலி வானில் முகம் காட்டிட
இன்றோ இதயம் துக்கத்தில் மூழ்கும்

கற்ற கல்வியாலும் கவலைக்கு மருந்தில்லை
மாமேதைகளிடமும் தக்க விடையில்லை
தகவல் அறிவோ இரவல்,-வேதங்களும்
வேள்வியும், சாதியமும் தர்மமான அல்லல்

உண்டு, குடித்து, இனம் பெருக்கி, உறங்கி எழுந்து,
மூப்பு, பிணி வருத்த ஓர் நாள் இறக்கும்
நடைப்பிண வாழ்வில் அமைதி கானல் நீரான நிலை-
மனமோ பொன்மானைத் தேடும் அவல நிலை

அறமறிந்தேன், பொருள் அறிந்தேன்
காதலில் துய்த்தே இன்பத்துப்பால் அறிந்தேன்
இன்று மனமுற்ற துயர் துடைக்க
வேள்வியோ, வேதமோ துணையில்லை

வரட்டு சாஸ்திரங்களில் வார்த்தைக் குப்பைகளைத் தவிர வேறொன்றுமில்லை,
வீடுபேறெனும் பேருண்மை அறியப், பற்றறுத்து பந்த பாசத்தை துறந்தேன்
குழல் களைந்து, காவியணிந்து- நாடு, காடு, நகரம் கடந்து
சந்நியாசியாய் என் தேடலை ஆறு வருடங்கள் தொடர்ந்தேன்

சத்தியமோ கானல் நீரானது, வரட்டுத் த்துவமோ வாழும்
வேதமானது, முனியும், தபசியும் அறிந்தது ஏதுமில்லை
கற்றறியும் பாடமில்லை சத்தியம், நிதரிசனமானது

மையிழந்து செங்கயல் நெடுங்கண் வாட, மலரும் நெய்யுமிழந்து
கார்குழல் நோக, மதிநுதல் பொட்டிழந்து சோர
வளை மறந்த பூக்கரங்கள்-மேகலையிழந்த துடியிடை
சிலம்பிழந்த பங்கயப் பாதங்கள், குண்டலம் துறந்த மலர்ச் செவிகள்



மையேந்தும் விழிகள் நீர் ஏந்திக் கலங்க-பூ நெஞ்சை
சோகப் பூநாகம் தீண்டி வருத்த, சொல்லியழ மொழியின்றி
ஊமையான பாவை, சொந்தம் சொல்லக் காதல்
உறவின்றி சோகப் புயலில் வீழ்ந்த பூவை

கானக்குயில்கள் துணையோடு கூவிக்களிக்க, கலாப மயில்கள்
இணையோடு ஆடி மகிழ, ஜோடிப் பைங்கிளிகள் கொஞ்சி மகிழ
இணையை பிரிந்து வாடும் பேடின் இதயத்திலோ இமயச் சோகம்
துணைவன் மனதினிலோ தேடலின் தணியாத தாகம்


நித்திலமே என் நெஞ்செழுதிய அன்புக் காவியமே
பெண்மையின் அணிகலன் பூண்ட பொற்கொடியே
கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வி
ஒரு நாளும் பிரியேன் என மணந்தேன்-இன்றோ
உலகே மாயை என அறிந்தே-உண்மையைத் தேடி
ஒரு மொழி கூறாமல் உங்களைப் பிரிந்தேன்
சத்தியத் தேடலாய் என் பயணத்தை தொடர்ந்தேன்

சொல்ல வார்த்தையின்றி நெஞ்சம் தவிக்க
ஆயிரம் அம்புகள் பாய்ந்த சோகம் நெஞ்சை வதைக்க
விடை பெற்றுச் செல்ல- மீண்டும் வீடு வரும்
பயணமல்ல தேவி , வீடு காணும் பயணம்

உண்மையைத் தேடலாக்கி காதலைத் துறந்த ஆண்மை
காதலைத் தேடலாக்கி சோகத்தை வரித்த பெண்மை



ஞானம்




ஆறு வருட கால சத்திய யாத்திரையில்- பிருகு முனி, ஆராதகாலம் முனி,
உத்தக இராமபுத்தர முனி , இராஜரிஷி நெகரி என்பவர்களிடம் கற்றும்
விடையில்லை, அநபநாசதி, பிராணாயாமம், சமாதி எனும்
மூவகைத் தியானங்களிலும், சாங்கியத்தில் தேர்ச்சி பெற்றும்
மனதில் அமைதியில்லை, தேடலுக்கு விடை கிடைக்கவில்லை

ஓதிய வேதமெல்லாம் வெற்றுச் சத்தங்களாய் ஒலிக்க
மெய் ஒடுங்கி கூடு தெரியப் புரிந்த தவத்திற்கும்
உண்மையின் காட்சியில்லை- ஒட்டி
உறவாடிய தவசிகளும் துயரான தொல்லை

ஓடும் நிரஞ்சனா நதியோரம் -ஓயாத கடுந்தவத்தில்
மெய்வாடி மனம் சலிக்க , ஓடும் நதியில் செல்லும் படகில்
ஓர் இசைஞானியின் இனிய அறிவுரை
நெஞ்சை நிறைக்க வியந்தே விழித்த மனம்

இறுக்கமான தந்தியில் இசை பிறக்காது
தளர்ந்த தந்தியும் இசை மீட்காது
மகத்தான இசைக்கு மத்திமமே வழி




மெய் வருத்தித் தேடிய மெய் பொய்யாக-நீராடி
மெய் உயிர்க்க, மங்கை சுஜாதா அளித்த பாற்சோற்றை
உண்டு திடம் கொண்டவர், பொய் உறக்கம் கலைந்திட
இடம், வலம் கடந்து இதயம் உண்மையைத் தரிசிக்க
மனம் கழித்து மத்தியில் நின்றே-உண்மையை
அறியும் வரை எழுவதில்லை, மெய்வற்றி, மேனி சுருங்கி,
எலும்புகள் இற்றுப்போனாலும், இரத்தம் சுண்டிப்போனாலும் -
ஞானம் எய்தாமல் எழமாட்டேன் சத்தியம் என்றார்
-
வழுவா உறுதியோடு-கீழ்த்திசை நோக்கி
வானுயர்ந்த போதிமர நிழலில்-பத்மாசனமிட்டு
தியானத்தில் அமர்ந்த சத்தியகிரகி

போதிமாதவனாய் மலர்ந்தவரோ மெய் ஞானி
வைகாசிப் பௌர்ணமி பூரித்து வாழ்த்திட -தேவர்கள்
பூ மழை பொழிந்து மகிழ்ந்திட
ஆணவமழித்து ஞானம் பெற்ற ததாகதரோ
பூஜிக்கத் தகுந்த புத்த பெருமான்

செயல் கழித்து, மனம் கழித்த ஓய்வில்
எண்ணங்கள் மறைந்திட-இருப்பாய்
இருந்த சூனிய மனம் கதிரவனாய் ஒளிர்ந்தது




ஆணவ மனம் மடிந்திடும் வேளையில்
அழகிய காமன் மகளீராய் ஆடிய நர்த்தனம்,
காமன் கணைகளை வீழ்த்திய இதயத்திலோ
ஞானத்தின் ஆனந்தக் கீர்த்தனம்



கொடியிடையும், கூர்வாள் ஒத்த புருவமும், கயல்விழியும்,
மதிநுதலும் ஓங்கப்-பணைஇள வனமுலைகள் குலுங்கச்
சுரிகுழல் ஆடப், பூங்கரங்கள் அபிநயங்கள் காட்ட
செவ்வாழைக் கால்களும் செந்தாமரைப் பாதங்களும் தூக்கி
காஞ்சி இருகக்க, கலிங்கம் குலையக் கன்னியர் ஆடிய நடனம்

காம பாணமே கடைசி ஆயுதமாகி- மனமே
மாறானகிப் பெருமானை வீழ்த்த முயன்று தோற்று,
நாணிக் கண் மறையக் கன்னியரும் மறைந்தார்
காமன் ஐங்கணையும் முறிந்திட காமனும் மறைந்தார்

ஞானம் உதித்திட அக இருள் கலைந்திட
தோன்றிய புது உதயம்-தவம் முடிந்திட
தனமான பேரானந்தம்-யாம் பெற்ற இன்பம்
பெறுக வையகம் என்று கூத்தாடிய மனம்




பேரமைதியும், பேரின்பமும் தரும்-பேருண்மையை
நாம் அறிந்தோம்-ஆசைக்கு அடிமையாகி
நாளும் துக்க சாகரத்தில் அல்லாடும் மனிதருக்கு
பேருண்மை புரியுமோ? சிற்றறிவுக்கு எட்டுமோ?

ஆசைக்கும், வெறுப்பிற்கும் அடிமையான மனமோ
நிலை உண்மையை அறியாது -ஆசாபாசங்களால்
நிறைந்த மனதிற்கு நிர்வாண தர்மம் புரியாத மர்மம்

உண்மையை போதிப்பதால் பலனுண்டோ?-புரியாதார்
பரிகசிக்க சிரமமும் பரிகாசமும் எமக்கு எதற்கோ?
சிந்தனை செய்த ஞானி தியானத்தில் நிலைத்த யோகி

இளங்கதிராய் ஞானியின் உன்னதத் தோற்றம்
கண்ட இரு வணிகர் மனதில் பேரின்பம்
அப்பமும், தேனும் காணிக்கையாக்கி
ஆசி பெற்ற மனங்களில் அமைதியின் வாசம்




பெருமானை வீழ்த்த-பெரு மகிழ்வோடு
மாரன் உரைத்தான் -ததாகதரே
நிர்வாணம் பெற்றீர்- இனி பரி நிர்வானம் பெற
தடையான உடலை உதிர்த்து விடும்

பிரம்மா சம்போதி தோன்றி-பெருமானே
அல்லனும் மானும் ஈடேற்றமடைய
நீர் பெற்ற தர்மம் உலகறியவேண்டும்
உயிர்கள் நலம் வாழ உம் போதனை வேண்டும்

உலகோர் உறும் துயர் மறைய-பெருமானே
உற்ற மருந்தோ நீர் பெற்ற தர்மம்-மானுடர்
அக இருள் கலைந்து புது ஒளி பெற
கருணை காட்டுங்கள் பணிந்து வேண்டினார்

முன்னர், தம்மோடிருந்த ஐந்து தவசிகளுக்கு
தர்மத்தை உபதேசிக்க ததாகதரும் கருணை கொண்டார்
யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றே
அவர்களைத் தேடிச் சென்றார்





காந்தமயமான இருப்பு கவர்ந்திழுக்க-ஜோதி
மயமான தேஜஸ் மனதை மயக்க -தவசிகளும்
பணிந்தே பெருமானை வாழ்த்தி வரவேற்றார்
தொழுதே ஞான உபதேசம் பெற்று ஐயம் துறந்தார்

தேடியதும், தட்டியதும், கேட்டதும்-மனமழிய
என்னுள் கண்டேன்-ஆணவம் மறைத்த
அரும் பொக்கிஷத்தை நானறிந்தேன்-


தவசிகளே, நீங்களும் அறிய
என் முதல் போதனையை உங்களுக்கே
உவந்து பகிர்ந்து உவகையுற்றேன்

பிறப்பு துக்கம், இறப்பு துக்கம்
பிணி மூப்பும் வருத்தும் வாழ்வு துக்கம்
வேதங்கள் வெற்றுப் பாலை வனங்களே
வேதரிஷிகளின் கோட்பாடுகள் யூகங்களே

நிருபணமானதே உண்மை
சிந்தனைக்கு அடிப்படை பகுத்தறிவு
பிராமணியம் மெய் வாழ்விற்குத் தடை
ஒதுக்கித் தள்ளுவதே உன்னத விடை

பிரம்மம் உள்பொருள் என்பதற்கு ஆதாரமேது
அறியப்படாதது மெய்பொருளாவது எவ்வாறு?
நம்பிக்கை என்பது மாயக் கற்பனை
அந்தகன் தேடும் ஊன்று கோல்

தோற்றம் பெற்றதெல்லாம் அழிவுறும்
காணுதல், அறிதல் புரிந்து கொள்ளுதலே உண்மையின் வழி-
நம்பிக்கை கடந்த நெறி, உண்மையே மனிதருக்கு விடுதலை



உனக்கு நீயே ஒளியாகிப்போ-அப்போ தீப பவ
உண்மையின் ஒளியே வழியாகும்.
உண்மையை உணர்தலே நிர்வாணம்.

பகைமையை பகைமையால் வெல்ல முடியாது
பகைமையை அன்பினால் வெல்லுங்கள்
இதுவே தொன்று தொட்டு வரும் தர்மம்
என்றுமுள்ள உண்மை
ஏஸ தம்மோ ஸனந்தனோ


தர்மச்சக்கரம் சுழல்கின்றது
நன்மை, தீமை கடந்து-மனமழித்தவன்
சூனியமாகின்றான்-இருப்போடு இருப்பாகின்றான்
அறியாமையே தீமைக்கு காரணம்

ஏஹிபஸ் ஸிகோ- வந்து பாருங்கள்
உண்மையை நீங்களே அறியுங்கள்.
அறிந்து உணர்ந்து கொள்பவன்
கவலை, துன்பங்களை வெல்கிறான்

தர்மம் நதியைக் கடக்கும் படகே
கடந்தபின் தலையில் சுமப்பது மடமையே
நன்மை, தீமை எனும் இருமை கடந்து
மத்திம பாதையில் வாழுங்கள்

தூய்மையின் வழியான பஞ்சசீலத்தையும்
அட்டாங்க மார்கத்தையும் நாளும் கடைப்பிடியுங்கள்

மாறுபடும் வாழ்வில் மாறாதது ஏதுமில்லை
எல்லாம் சார்பு நிலை சார்ந்தவையே
மலரைப்போல் காலையில் மலர்ந்து
மாலையில் உதிரும் வாழ்வு நீர்க்குமிழி போன்றது



நான் என்பது பொய்-ஆன்மா என ஏதுமில்லை
அறிந்து கொள்ள முடியாததை நம்பாதீர்
உண்மையை உணர்ந்தறியுங்கள்

ஆணவமனமே சிறை, மனமே தளை
ஆசை மனம் கழித்தவருக்குத் துக்கமில்லை
இனியொரு பிறப்புமில்லை-ஆசையை துறந்து
உண்மையில் நிலைத்தவனுக்கு துன்பமில்லை

இரக்கமும், கருணையும் ஒளிர
எவ்வுயிரையும் தம்முயிர்போல் நேசித்து
கொல்லாமையைக் கடைப்பிடியுங்கள்,
அகிம்சையில் நிலைத்திருங்கள்.

தூய மனத்தோராய் வாழ்ந்து காம இச்சைகளை-
மனதாலும் சொல்லாலும், செயலாலும் வெல்லுங்கள்
பிறன்மனை நயவாமை உங்கள் ஆண்மை,
விபச்சாரம் தீமை, பொய், புரளி. வீண் பேச்சு,
புறங்கூறல் தவிர்த்து வாய்மையை வாழ்வாக்குங்கள்

மது, போதை வஸ்து உங்களுக்குப் புறம்பாகட்டும்
உயிருக்கு தீங்குகாகும் நஞ்சோடு உறவு கொள்ளாதீர்
புத்தநிலை உங்களுக்குள்-நீங்களும் புத்தராகலாம்

1. ***பனாதிபட்ட வீரமணி- சிக்காபதம் சமாதியாமி-***
கொல்லாமை எனும் விரதத்ததை ஏற்று கருணை,
இரக்கத்தை வாழ்வில் எந்நாளும் கடைப்பிடிப்பேன்.

2. ***அடின்னாடான வீரமணி சிக்காபதம் சமாதியாமி-***
பிறர் உடமையை விரும்பேன் எனும் விரதம் பூணுகிறேன்

3. ***காமிசு மிச்சார வீரமணி சிக்காபதம் சமாதியாமி-***
மனதாலும், உடலாலும் முறையற்ற
காமசுகத்தை விரும்பேன் என விரதம் பூணுகிறேன்

4. ***முஸாவடா வீரமணி சிக்காபதம் சமாதியாமி-***
வீண் பேச்சு. பொய், புரளி புறங் கூறாமை தவிர்த்து
வாய்மையில் நிலைத்திட விரதம் பூணுகிறேன்

5. ***சுரமேராய மஜ்ஜா பமாடடத்தானா வீரமணி சிக்காபதம் சமாதியாமி-***
மதுவோ, புகையோ, போதை வஸ்தோ அருந்தேன்
எனும் விரதம் ஏற்கிறேன்

வெற்றுச் சடங்குகளில், வேள்விகளில், வேதங்களில் விடுதலையில்லை
நாளும், ஓதியும், கூவியும் பலனில்லை
உண்மையே உங்களுக்கு விடுதலையளிக்கும்
விழிப்புணர்வே அக ஒளி-உங்கள் ஒளி ஒளிரட்டும்

அட்டாங்க மார்கமோ உண்மையின் வழி

1. **சம்மாதித்தி-**	**நந்காட்சி-**	Perfect Understanding-	*Realization of real nature of existence*
2. **சம்மா சங்கல்ப**	**நல் எண்ணம்-**	Perfect Thought-	*Properly guided human emotions*
3. **சம்ம வக்கா-**	**நற்பேச்சு-**	Perfect Speech	*Harmonized human communications*
4. **சம்மா கமந்தோ-**	**நற்செயல்-**	Perfect actions	*Upholding morals and ethics*
5. **சம்மாஆஜிவோ-**	**நல் ஊக்கம்-**	Perfect Livelihood	*Respectable and harmless way of life*
6. **சம்மா வ்யாயமோ-**	**நன்முயந்சி-**	Perfect Effort	*Dynamic mental process directed to discipline and cultivation of the mind*
7. **சம்மாசத்தி-**	**விழிப்புணர்வு-**	Perfect Mindfulness	*Awareness of own actions, words and thought*
8. **சம்மா சமாதி-**	**மன ஒருமை-**	Perfect Concentration	*Higher consciousness with purity and wisdom*

Panna-
WISDOM


Sila- Moral
Discipline

Samadhi-
Mental
Discipline



உண்மையே வாழ்வு -சூனியமே இருப்பு
என்றும் மாறாத உண்மையே தர்மம்-அது
எனக்கு முன்பும் இருந்தது-எனக்குப் பின்பும் இருப்பது

தோற்றம் பெற்றதெல்லாம் துக்கத்திற்கு ஆட்பட்வை-மாறுபடும்
தோற்றமெல்லாம் அநித்தியமானவை, அழிவுக்குட்பட்டவை
துக்க, அனிச்ச, அநாத்த -புரிந்தறியாங்கள்.





நான் எனும் ஆணவ மனம்
எண்ணங்களாய், புலன்களாய். அறிவாய்
நலிவுறும் உடலாய், பிரக்ஞ்சையாய்
அமைந்த கூட்டுச் சேர்க்கையே

நன்னம்பிக்கையே உன்னத செல்வம்
தம்மமே இன்பந்தரும்-உண்மையே இன்சுவை
உயர் பேரறிவால் உரம் பெற்ற வாழ்வே
உன்னத வாழ்வு

விழிப்புணர்வோடு வாழ்தலே பேரின்பம்
சத்தியத்திற்கு சாட்சியமாக நேர்ந்தால்-தனித்து
பெருமரமாய் எழுந்து நில்லுங்கள
தரையில் வீழ்ந்தாலும்-விதையாய் விழுந்து-
போராட முளைத்து எழுங்கள்
வாழ்வில் வெற்றிபெற சத்தியத்தைக் கடைப்பிடியுங்கள்

உங்களை நீங்களே ஏமாற்றாதீர்
நீதியிலும் மேலானது கருணை
மேதைகளின் அறிவுரையை விட-கருணையுள்ள
இதயத்தை எளிய மக்கள் விரும்புகிறார்
இதயம் திறந்து தங்கள் குறையைக் கூறுகிறார்






சூரியன், சந்திரன், சத்தியம்.
மூன்றையும் மறைக்கமுடியாது

அன்பை இரக்கும் ஏழையாக வாழாதீர்
அன்பை அள்ளி வழங்கும் பெருவள்ளாகுங்கள்
அழகிய மனிதர் எப்போதும் நல்லவரல்லர்
நல்ல மனிதரோ எப்போதும் அழகிய மனிதர்

வெற்றி பெற்ற மனிதர் வாழ்வில்-எப்போதும்
நறுமணமாய் திகழ்வது அன்பும், அமைதியுமே

உறவுகளுக்கு இயற்கை மரணமில்லை
ஆணவம், அறியமை, தீய மனோபாவம்
அவற்றை கொல்கின்றது.

பிறரைத் திருத்துவதைவிட-உன்னையே நீ திருத்திக்கொள்
உன் உலகு திருந்தும்



தியானமும், விழிப்புணர்வும் கண்ணிற்குப் புலப்படாதவை
ஆனால் அவற்றால் நிகழ்பவை அதிசயங்களே
சத்தியத்திற்கு சாட்சியமில்லாத வாழ்வு தோல்வியானது.

ஒரு கணம் ஒரு நாளை மாற்றும்-ஒரு நாள் வாழ்வை மாற்றம்
ஒரு வாழ்வு உலகை மாற்றும்.
பேசுமுன் சிந்தியுங்கள்-பேசப்போவது உண்மையா?
அவசியமானதா? கருணைமிக்கதா?

கடந்த காலம் எத்துனை கடினமானதென்றாலும்
எப்போதும் நீங்கள் மீண்டும் புதுவாழ்வு வாழ
எதுவும் தடையில்லை
யாரோடும் நெருங்கிய உறவு கொள்ளவேண்டாம்
ஏனெனில் நெருங்கிய உறவு-பந்தப்படுத்தும்
பந்தம் துக்கத்திற்கு வழிவகுக்கும்
எதையும் எதிர்பாக்காத உறவே உண்மையான உறவு
எதுவும் நிரந்தரமல்ல-எல்லாம் ஒரு நாள் மாறும்
வீணே கவலைப்பட்டு உங்களை வருத்தாதீர்கள்

யாரும் உங்களுக்கு மீட்பரல்ல, நீங்களே உங்கள் மீட்பர்
தர்மத்தின் பாதையில் துன்பமில்லை
நீங்களே உங்களுக்கு அரண்



பேரின்பத்திற்குப் பாதையில்லை-பேரின்பமே பாதை
நெருப்பின்றி மெழுகுவர்த்தி ஒளிராது
விழிப்புணர்வின்றி வாழ்வு சிறக்காது

கனவிலிருந்து விழித்தெழுங்கள்
திறந்த மனத்தோடு உண்மையைத் தேடுங்கள்
நேர்வழியில் வாழுங்கள்,
முடிவில்லா ஆனந்தம் உங்களதே




துக்கம், துக்கத்தின் காரணம்,
துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம்
கண்டேன் களிகூர்ந்தேன்

அட்டாங்க மார்க்கமும், பஞ்ச சீலங்களும்
தம்மபதமும் வாழ்வின் நெறியாக
எனக்கு நானே ஒளியாகிப்போனேன்
அப்போ தீப பவ
மனமழிந்த தூய விழிப்புணர்வே-புத்த மனம்.
சித்தார்த்தன் கௌதம புத்தனானேன்

கொல்லாமை, களவு, காமம் மெய்யால் புரியும் தீமைகள்
பொய், புறங்கூறல், வசை, வீண்பேச்சு வாக்கால் புரியும் தீமைகள்
ஆசை, கோபம், குரோதம், கெட்ட எண்ணம், மனதால் புரியும் தீமைகள்

வாழ்வு நிச்சயமற்றது-மரணமோ நிச்சயமானது
சடமும், மனமும் இணைந்த சேர்வையே மனிதன்
இரண்டிலுமிருந்து பெறும் விடுதலையே வாழ்வின் நோக்கு




யாராலும் நிறுத்த முடியாத காரண காரியத்தின்
சக்கரம் சுழல்கின்றது, மனிதன் விடுதலை பெறும் வரை
பிறப்பு, இறப்புச் சக்கரம் சுழலும்

உலகளாவிய அன்பை வளர்ப்பதே நற்பண்பு
மன அமைதியே உயர்ந்த மகிழ்ச்சி

மானுட துன்பத்திற்கான காரணங்களைப்
புரிந்து கொள்வதன் மூலம்
பெறப்படும் உண்மையே முழுமையான உண்மை

அறிவு வளர்ச்சி, ஒழுக்கம் , மனத் தூய்மை பற்றி
கற்பிக்கும் மதமே உயர்ந்த மதம்
கோட்பாடுகளையும், வெறும் நம்பிக்கைகளையும் சார்ந்திருக்காமல்
நடை முறைக்குச் சாத்தியமான ஒரு வாழ்க்கை முறையை
அறிமுகப்படுத்தும் தத்துவமே உயர் தத்துவம்


விழிப்புணர்வே இறவாமைக்கு வழி
முயற்சியுடனும், விழிப்புடனும் தியானத்தில் நிலைத்திருங்கள்
மனதைச் செம்மைப்படுத்துங்கள்
ஒழுங்குபடுத்திய தூய மனம்-பெற்றோர்
சுற்றத்தார் செய்யாத நன்மைகளைவிட
அதிக நன்மைகளைச் செய்கிறது



போர்க்களத்தில் பெறும் வெற்றியை விட
தன்னைத்தானே அடக்கி வென்றவரே மெய்யான வீரர்
அடக்கமும், தூய்மையும்,அகிம்சையும் நிறைந்தவரே பிராமணர்
அவரே சமணர்-அவரே பிக்கு

வெற்றிவீரன் பகைமையை வளர்க்கிறான்
தோல்வியுற்றவன் நோவுடன் கிடக்கிறான்
வெற்றி, தோல்வியை விரும்பாத சாந்தகுணமுள்ளவன்
உவகையோடு வாழ்கிறான்

ஆசையைப் போன்ற நெருப்பு வேறொன்றுமில்லை
பகைமையைப் போன்ற பாவம் வேறு ஒன்றுமில்லை
ஐம்புலன்களால் ஏற்படுகின்ற நோயைப்போன்ற
நோய் வேறொன்றுமில்லை-நிர்வாண மோட்சம்
போன்ற உயர்ந்த சுகம் வேறு ஒன்றுமில்லை




ஆசையிலிருந்து துன்பம் உண்டாகின்றது
அச்சமும் உண்டாகின்றது-ஆசையை
அறுத்தவருக்கு துன்பமில்லை, அச்சமுமில்லை
உண்மை பேசு, சினம் தவிர்,-இருப்பது
எள்ளளவாயினும்-இரப்பவருக்கு ஈந்து மகிழ்


பாவமும் புண்ணியமும் உன்னாலே செய்யப்படுகின்றன
ஒருவர் இன்னொருவரைச் சுத்தம் செய்யமுடியாது

காமத்தீ போன்று வேறு தீ இல்லை-பகைமையைப்
போன்று வேறு உறுதியான பிடி இல்லை-
மோகவலை போன்று வேறு வலை இல்லை-
ஆசை வெள்ளம் போன்று வேறு வெள்ளம் இல்லை

நன்மை புரிந்து, தீமையைத் தவிர்த்து
மனதை தூய்மைப் படுத்துங்கள்
தூய மனமே அமைதியின் இருப்பிடம்




பஞ்ச சீலங்களைக் கடைப்பிடித்து
அட்டாங்க மார்கத்தில் வாழ்ந்து
மனதை தூய்மையாக்கி- உங்களுக்கு
நீங்களே ஒளியாகிப்போங்கள்



உன்னத ஒழுக்கமே சீலம்
சிந்தையும், செய்கையும் ஒன்றாகும்
உன்னத விழிப்புணர்வே-சமாதி
எதையும் ஆய்ந்தறியும்
உன்னத ஞானமே பிரக்ஞா-பன்னா

இந்த வீட்டைக் கட்டுபவனைக் கண்டுகொள்ள
பல பிறப்பெடுத்து வீணே அலைந்தேன்-
மீண்டும் மீண்டும் பிறத்தல் துன்பம், இறத்தல் துன்பம்
வீட்டைக் கட்டுபவனைக் கண்டுகொண்டேன்
ஆசையே வீட்டைக் கட்டுபவன்

ஆசை அறுந்திட பிறப்பறுந்திடும்
மனமழிந்திட தூயமனம் தோன்றிட
ஆசை அறுந்திடும்- பிறப்பறுந்திடும்
துன்பம், துக்கம், துயரம் மறைந்திடும்




தன்னையறிதலே நிலையான உண்மை
தன்னையறிந்திட அதி உன்னத ஞானம் பிறந்திடும்
அதி உன்னத அமைதி பரமானந்தம் நிலைத்திடும்
வாழ்வின் அர்த்தம் நிறைவடையும்
அதுவே சம்போதி-மகா பரிநிர்வாணம்

தூயவராய் வாழுங்கள்-தம்மமே பாதை
தம்மத்தை காண்கிறவன் என்னைக் காண்கிறான்
என்னைக் காண்பவனோ தம்மத்தை காண்கிறான்


ஞாயிறு ஒளிர்வது ஒரு பகலில்-திங்களும்
ஒளிர்வது ஓர் இரவில்
ஞாலத்தில் எந்நாளும் ஒளிர்வதோ
புத்த பொருமான் ஒருவரே

சந்திப்பு




சொந்த பந்த உறவுகளைத் தேற்றிட
மனைவிக்கும், மகனுக்கும், முதிய தந்தைக்கும்
தானறிந்த உண்மையைப் பகிர்ந்து இன்புற
பெருமான் புத்தரும் பிறந்த நாடு போனார்

கதிர் கண்ட மலரோ? கார் கண்ட தோகையோ?
கானம் கேட்ட ஒற்றைக் குயிலோ?
மழை கண்ட பயிரோ? மனம் பூரித்து நெகிழ
வருவது மகனா? மாதவனா? தந்தை மனம் கேவ,
உத்தமரைக் கருணாமூர்த்தியை-பணிந்து தொழுது
உவகையோடு வரவேற்ற ஊரார்



சுந்தரக் கோலமலர் கொடியிடையாள்
பிறை நுதலாள், கனி மொழியாள். சுரிகுழலாள்,
குறையாத நிறை கற்புடை மங்கை
கணவனைப் பிரிந்தும்-மாற்றான் கைத்தலம்
பற்றாத மடந்தை-மனதாலும்
மாற்றானை நினையாத பதிவிரதை



வருவது, மணாளனா? என் மகனின் தந்தையா?
பெருமான் வருகையறிந்து பேதை மனம் விம்ம
சோக வனத்தில் சிறையிருந்த மங்கை-இனிச்
சோகமில்லை ஆனந்தமே என இன்புற்ற தாய்மை


பூ நெஞ்சில் இனம் புரியாத இன்பம் பெருக
வாழ்வைத் தவமாக்கிய பெருந்தேவி
வரமான பெருமான் தரிசனத்திற்கு-பக்தையாய்
மகனோடு காத்திருந்த அம்மை

அண்ணலும் ததாகதராய் எழுந்தருள-
என்றும் நின் அடிமை நான் என்றே-திருப்பாதம்
பணிந்து தொழுது பூஜை செய்து
பதிபக்தியை சொல்லிய அம்மை


சிரம் தாழ்த்தி பாதம் பணிந்தவள்
என்றும் நின்னடிமை நான் என்றே
பொன்னடிகளை கண்ணீரால் அபிஷேகித்து
பூங்கரங்களால் தழுவி பூஜித்த தேவி

கருணை வள்ளலின் அருள் மழை
அன்னைக்கு ஆனந்த அமைதி தர
பாலை நெஞ்சில் வான் மழை பொழிந்திட
பூவனமாய்ப் பூத்த தாய்மை உள்ளம்

காதல் தவத்தால் ஈந்த புதல்வன் இராகுலனை
கருணாமூர்த்திக்கே காணிக்கையாக்கி
வையகம் புகழும் ததாகரே நின் தந்தை
வணங்கு மகனே -தாய் பணித்தாள்




சிந்தை, மொழி, செய்கையெல்லாம்-தந்தை
முகத்தில் ஞானமாய் ஜொலிக்க
சீவராடையும், பிட்சா பாத்திரமும் குபேர நிதியாய்
ஒளிர கண்டவன் மகிழ்ந்தான்



மண்ணாளும் மன்னாதி மன்னராகாமல்
காலம் கடந்து எந்நாளும் வாழும்
மக்கள் மனம் ஆளும் புத்தர் பெருமானைக்
தொழுது பணிந்தான் புதல்வன் ராகுலன்

பணிந்த மகனைப் பரிவோடணைத்த புண்ணியன்
அழியும், மண், பொன், பெண், அரசு வேண்டாம்,
அழியா தம்மத்தை அறிந்து வாழ-
உன்னைப் பிக்குவாய் அழைக்கின்றேன்
மகனையும் சீடனாக்கி-அழியா தம்மத்தை
செல்வனுக்கு செல்வமாக்கிய பெருமான்




மெய்யறிந்த தந்தையும் தன் மகனை
போதிமாதவனாய் கண்டே-மகிழ்ந்து தொழுது
மனதில் அமைதி கண்டார்
விதி வலிது என்றே உள்ளத்தே வியந்தார்

தந்தை, தாய் தாரத்தைப் தேற்றிப் போற்றி
தாம் பெற்ற பொக்கிஷத்தைப் பகிர்ந்து இன்பற்று
மகனுக்கு உயர் தம்மத்தை வழங்கிச் சீடனாக்கி
தம் திருப்பணி தொடர்ந்த ததாகதர்

விழிப்புணர்வின் பேரொளி-மானுட
துன்பம் போக்கிட வழி கண்ட ஞான ஒளி
யான் பெற்ற இன்பம் பெறுக வையகம் என்றே
வாழ்வாலும், போதனையாலும். இருப்பாலும்
தம்மையே உலகிற்கு ஈந்த கருணாநிதி

மண் ஆண்ட மன்னாதி மன்னரெல்லாம்
மடிந்து பிடி சாம்பலானார்
பொன் கொண்ட குபேரனும் புராணமானார்
பெண் கொண்ட மன்னர் யயாதி, சலோமன்,
இராவணனும் பழங்கதையானார்




மண்ணும் பொய்யே, பொன்னும் பொய்யே
மானுட வாழ்வில் உண்மை ஒன்றே நிஜம்
அன்பு மனங்களை-ஞானத்தால், கருணையால்
ஆட்கொண்ட நித்தியமாய்-சத்தியமாய்,
யுகபுருஷராய் புத்தர் பெருமான்

மானுட துயர் துடைக்க-மணி முடியும்
காதல் மனையாளும், மகவும் துறந்த-இளங்கோ
புத்த தர்மம் எனும் பேருண்மையை தன்னுள் கண்டு
உலகிற்கு அளித்து இன்புற்ற கோ

என்றும் மானுடம் ஒளியில் வாழ
இன்றும் என்றும் ஒளிரும் சத்திய ஜோதி
தூய வழி நடந்திட-பாதையாய்
புத்த தர்மத்தை சுட்டும் கைகாட்டி

சாதி, மதம் கடந்த ஞானதீபம்
சம்சார சாகரத்தை கடக்க உதவும் சத்திய ஓடம்
சங்கத்தின் கீரீடம்-தம்மத்தின் ஞான பீடம்



நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ ஸம்மா ஸம்புத்தஸ்ஸ
ஞான பரிபூரண மூர்த்தியான புத்த பகவானுக்கு வணக்கம்

புத்தம் சரணம் கச்சாமி-பெருமன் புத்தரை சரணடைகிறேன்
தம்மம் சரணம் கச்சாமி-தம்மத்தை சரணடைகிறேன்
சங்கம் சரணம் கச்சாமி-சங்கத்தை சரணடைகிறேன்

மனம் ஆளும் புண்ணியனை-போதிமாதவனை-
காலமுள்ளவரைக்கும், கருணை செய்த குருவை
போற்றிப் பணிதல் புண்ணியமே-பெருமான் வழியில்
வாழ்ந்தால் நாமும் புத்தனாவது சத்தியமே

புத்தநிலை நம்முள்ளே-நாமும் புத்தர்களே

பரி நிர்வாணம்

இருப்பிலே மையம் கொண்ட பெருமான்
போதிநிழலில் ஞானம் கண்ட கோமான்
கருணை மழை பொழியும் பகவான்
கண்விழிக்கக் காத்திருந்த ஏழை






தவமாய் காலம் பல அண்ணலுக்காய்
தவம்புரிந்து காத்திருந்த சேதி உரைத்தே
தன் விருந்தாய் இன்று வரத் -தம்ம
விருந்தளிக்கும் பெருமானை அழைத்த ஏழை

ஏழைக் கொல்லன் நான்
இருப்பதை பகிர்ந்து என் அன்பை காட்ட
எனக்கோர் சந்தர்ப்பம் தாருங்கள்
ஏக்கத்தோடு நெடுநாள் காத்திருந்தேன்

மண்ணில் விளைந்தவற்றை மறவாமல்
விருந்துக்காய்ச் சேர்த்திருந்தேன், இன்று நிறைவேறும்
என் கனவு , பெருமானுக்கு ஏழை என் வீட்டில் விருந்து
நீங்கள் தரும் பேரின்பம் அரிய மருந்து

அண்ணலும் அடியவர் அழைப்பை அன்போடு ஏற்றிட-
மன்னன் வந்து இன்று நீங்கள் என் விருந்து பணிவாய் அழைத்திட
பெருமான் உரைத்தார்-விருந்துக்கு அரசே என் சீடர்கள் வருவார்
நானோ இன்று என்னை அழைத்த அடியாரின் விருந்தாளி




எனக்காய் அவர் காத்திருந்த காலம் பெரிது
ஏழ்மையின் காரணத்தால், எல்லாம் துறந்த புத்தர்
ஏழையைப் புறக்கணித்தல் ஏழ்மையிலும் கொடிது
ஏழை, செல்வன் பேதம் புத்தருக்கு இல்லை

அறுசுவை அன்னமோ விருந்தோ ஏழையிடம் இல்லை
அருமருந்தாய் ஏழையின் பேரன்பு
குடைக்காளானால் படைத்த அமுது
பழுதானால் அதுவே மெல்ல கொல்லும் நஞ்சு

ஏழைக் கொல்லனின் விருந்தை இன்முகத்தோடு உண்டவர்
உடல் நலம் குன்றி வருந்திட, உயிர் பிரியும் வேளை நெருங்கிட
பரிநிர்வாணப் பயணம் தொடங்கிட-பாசத்தோடும்
பரிவோடும் உரைத்தார் பெருமான் புத்தர்


பல்லாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆனந்தா
ஒரு புத்தர் மலர்கின்றார், உதிரத்தை பாலாக்கி அன்னையோ
உலகிற்கு வந்த உத்தம புதல்வனுக்கு முதல் உணவு அளித்தார்-
உடலை உதிர்த்து பரிநிர்வாணமடைய
உத்தமர் எனக்களித்த கடைசி விருந்து இது




விதி விலக்கான பெரிய மனிதர் விரும்பிப் படைத்த
அரிய உணவு, போற்றி வழிபடத் தக்கவர் இவர்
ஒரு பொல்லாங்கும் நேராது புனிதரைப் பாதுகாப்பீர்

உண்டதோ விருந்தாய் நஞ்சு
உத்தமர் வாய் உதிர்ததோ கருணையின் அமுது
அன்பால் நிறைந்து-அன்பு மயமானவரோ
அன்பைப் பகிர்கின்றார், கருணை மழை பொழிகின்றார்

மரணம் புத்தபெருமானுக்கு இல்லை
உடல் உதிர்க்கும் மரணமோ பரிநிர்வாண நிலை



முதுமையிலும் ஒளி குன்றாத ஞானதீபம்
அணையும் பொழுதறிந்தும்-அன்புச்
சீடர்களின் சந்தேகம் தீர்த்த சத்திய வேதம்
சத்சங்க இருப்பான பிரபஞ்ச நாதம்




பொய்யான மெய்யை உதிரும் நாளும் வர
கருணாமூர்த்தி அறிந்ததெல்லாம்
கருணையோடு சீடருக்கு அறிவித்தே
பரிநிர்வாணமடைந்த ஜோதி

இனியொரு பிறப்பில்லை என
களிப்போடு ஒளிர்ந்த ததாகதர்
வந்தவிடமும். போனவிடமும் ஒன்றாக
இன்றும் மறையாது ஒளிரும் ஞானச்சுடர்

சுடர் வந்தவிடமும், போனவிடமும் யாரறிவார்
புரிந்தவர் புத்தநிலை தம்முள்ளே என
அறிந்து தெளிந்து அகமகிழ்ந்தார்

காரிருளில் கைபிடித்த மனையாளையும்-காதலாகி ஈன்ற
மகவையும் கைவிட்ட கணவனும் ஞாலத்தில் உண்டோ?
மானுடத்தின் தீராத்துயர் துடைக்க-அகப்புரட்சி செய்த
மாமனிதர் கௌதமரே, தன்னை மனிதன் என்றழைத்த
ஞானப் புரட்சியாளரும் இவர் ஒருவரே



அட்டாங்க மார்க்கம் ஆரைகளாக
நீதி மாறாத நீளமாக
ஞானமே கட்டாக- நல் ஒழுக்கம் குடமாக
மாறாத உண்மை அச்சாணியாக
சுழலும் தர்மச்சக்கரம்



உண்மையைத் தேடலாக்கிய மனிதன்
தன்னை அறிதலே பேருண்மை என அறிந்து
தன்னை அறிந்த ஞானத்தால்
பரமானந்தத்தில் நிலைத்த புனிதன்

அகவேள்வியில் ஆணவ மனத்தை ஆகுதியாக்கி
புத்தனாய் மலர்ந்த பெருமான்
உலகுய்ய தான் கண்டறிந்த உண்மையை
வாழ்வாலும், போதனையாலும் -மடியும் வரை
ஈந்து மகிழ்ந்த கருணை வள்ளல்



மாட்சியும், மகிமையும் புத்தர்களுக்கே
புத்தர்களுக்கு இணையானவர் பாரினில் யாருமல்லை
இருப்பெனும் பெருங்கடலில் எழுந்த
விழிப்புணர்வின் பேரலைகளாய்ப் புத்தர்கள்



சத்திய வழிகாட்டிய புத்தர்கள் எல்லோரும்
உள்ளுணர்வில் ஒன்றே,
இருளில் தடுமாறும் மானுடர்க்கு ஞானதீபம்,
வழி தவறிய பயணிகளுக்கு கைகாட்டி

உண்மையே வாழ்வின் சாரம்-உடல்
மடிந்தாலும் உயிர்ப்போடு இருப்பது உண்மை
வானமும், வையகமும் ஒழிந்தாலும் ஒழியாதது உண்மை

உண்மையை அனுபூதியில் அறியாதார் வாழ்வின் பொருளை
அறியார், தாம் இழந்தது என்னவொன்று அறியாத மூடர்
பிறப்பு, இறப்பு எனும் துக்க சம்சார சாகரத்தில்
மீண்டும், மீண்டும் மூழ்கும் மடையர்


தன்னை அறிந்த மெய்யறிவே ஞானம்
தகவல் அறிவோ அடிமைத்தனம்
உண்மையை உணர்ந்தறி. உண்மையே விடுதலை



புத்தம் சரணம் கச்சாமி
தம்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி

(சப்பே தத்ததா பவங்க துதி தத்தா)
சகல உயிர்களும் நலமாய் வாழப் பிராத்திக்கின்றேன்





எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-11-10-2023

யசோதரா சித்தார்த்த கௌதமன்

கண்ணாளன் சூடிய மலர்கள் கசங்கி உதிர்ந்திட- வண்ணச் சோலையில்
பூத்த மலர்கள் பூங்குழலி சூடத் தவமிருந்து வாடிட
பூ மஞ்சம் தணலாய்த் தகித்திட-யாத்த காதல் தவம் கலைந்திட,
சூனியத்தை வெறித்த பார்வை , கண்ணீர் மலர்களை உதிர்த்த பூவை





மெய் வருந்தி, மனம் நொந்து மூச்சும் பெருமூச்சாக
அணி எதற்கு?, புத்தாடை எதற்கு? அன்னம்தான் எதற்கு?
தவமிருந்த பொன் மேனி கருத்து மெலிய
நூலிடையில் மேகலையும் நொந்து கழன்று வீழ்ந்ததே



கைவளை குலங்கி, காற்ச்சிலம்பு சினுங்கப்-புத்தாடையில்
பூத்த மலர் என முத்துப் புன்னகை பூத்தாட
வலம் வந்த மங்கை, அழகின் தேவ கங்கை
வற்றிக் காய்ந்த நதியாய் வாடியது என்னே!

மதி முகத்தில் பிரிவின் வலி நிலைக்கப்-பொன்னுடலை
விரகதாபம் வதைக்க-கண்ணே, மணியே காதல் நிலவே
எனக் கொஞ்சிய கணவன் பிரிவு பூ இதயத்தை வதைக்க
வண்ணம் குலைந்த சித்திரமாய் வாடி நின்றாள் யசோதரா



எண்ணமெல்லாம் அவராக, இதயம் முழுதும் தீராத வலியாக
கண்ணில் நீரை வைத்து, காங்கையைப் பூ நெஞ்சில் வைத்து
பஞ்சணையும் நோகப், பாலும் கசக்க-கண்ணாளா
என்னைப் பிரிந்திட ஏழை செய்த பாவம் என்ன?

நள்ளிரவில் சொல்லாமல் பிரிந்ததும் நன்றோ?
குழந்தையும், நானும் அறியாமல் தவிப்பதும் முறையோ
பொன் வானத்துக் கதிரவனைக் காணாத செந்தாமரை
என் வானத்து நிலவெங்கே என ஏங்கும் அந்தி மந்தாரை-யசோதரை

உயிர்களை வருத்தும் முப்பிணிக்கும் மருந்துண்டோ?
மூப்பு, பிணி, சாவு கண்டு கலங்கியதும் முறையோ?
இல்லறத்தில் நின்று அறம், பொருள். இன்பம் அறிந்து
வீடு தேடல் முறையன்றோ?-முற்றும் துறத்தல் விடையன்றே

விடை தேடும் யாத்திரைக்கு நான் தடை சொல்வேனோ?
நடைபோட்ட காதல் கங்கை நள்ளிரவில் சொல்லாமல் பிரிந்தது நன்றோ?
இரு மனம் கலந்த காதல் உறவு தந்த பரிசு-நாளை
என் தந்தை யாரோ? எங்கே? என்றால் பதில் சொல்வேனோ?


சொந்தமும், இரத்த பந்தமும் தளையானதோ?
கட்டியவளும் காதல் பரிசும் சுமையாகுமோ?
சத்தியத் தேடல் என் யாத்திரை -உத்தமியே விடை தருவாய்
உத்தரவு இட்டால் என் உள்ளம் மகிழ்ந்திருக்குமே?



நித்திலமோ ஒளியிழக்க- நெஞ்செழுதிய காதல் காவியம்
சோகத்தில் நிலைக்க உத்தமியாள் அழுதாள்
உறங்கும் சேயை மார்போடணைத்து -ஓரிரவில்
என் சொர்க்கம் நரகமானதே எனப் புலம்பியழுதாள்

உறவும், பிரிவுமாய் வாழ்வு -மாய உலகில்
என்றும் நிலையானது ஏது?
விடை கண்டு வருவார் மணாளன்-மனமே விழித்திரு
தனித்திரு, பசித்திரு துக்கத்தை களைந்திடு தேற்றினாள்

கண்ணயர்ந்து காதல் பொற்சிலை உறங்க-
ஈன்ற மகவோடு ஈடில்லாத் தாய்மையின் பொலிவோடு
காமசுரம் தணிக்கும் தேன் மருந்தோ அழகின் பெரு விருந்தோ
கனவில் குறுநகை பூத்திட-காரிருளில் பிரிந்த மணவாளன்



கண்களில் பூத்த கங்கை-நெஞ்சில் எரியும் காங்கையைச் சொல்ல
காதல் மனையாளையும், மகவையும் பிரிந்து வனம் செல்லும் வாழ்வு
இமயச் சோகத்தை தர-மூப்பிணிக்கும் மருந்து காணும் வரை
என் தேடல் ஓய்வதில்லை உறுதியோடு வீடு கடந்த உத்தமன்

மூப்பினால் வாடிய உடல் இளமை பொய்யென்று சொல்ல
நோயினால் வருந்திய உடல் மெய் பொய்யென்றுரைக்க
சாவினால் மாண்ட உடல் வாழ்வே மாயம் என்றுரைக்க
மூன்றுக்கும் விடைதேடி முப்பொழுதும் வாடியவன் பிரிந்தான்



மனையாளும், மகவும், மணி முடியும்
மனதை வருத்தும் நோய்க்கு மருந்தாகாது-
அருமருந்தை, சத்தியத்தை அறியும் வரை
தனி மனிதன் என் தேடல் ஓயாது



நல்லறமாயினும் இல்லறமும் , மணிமுடியும்
என் தேடலுக்குத் தடை-மனமே விழித்திடு
பயணத்தை தொடர்ந்திடு-பூண்ட பொன் விலங்கறுத்து
மன இருள் நீங்கிட ஒளி தேடி நள்ளிரவில் தொடங்கிய யாத்திரை,
விழா என மகிழ்ந்து கொண்டாடிய இல்லறத்தை இருள் கவ்வ
பூ நெஞ்சுக்குள் சோகப் பூகம்பம் வெடித்திட
சேல் விழிகளிலோ கண்ணீர்த் திரை

காயும் பௌர்ணமி கழிந்த இன்ப இரவுகளைக் காட்ட
கணவன் பிரிந்த கறுப்பு -இரவின் சுமையைக் கூட்ட
நெருப்பினில் வாடும் மாதவிக் கொடியாய் வாடி நின்றாள்
கொழுகொம்பிழந்த முல்லையென மண்ணில் விழுந்தாள்






கண்ணீரும் கனக்கும் மனதின் துயரம் சொல்ல
என்னைப் புரிந்ததும் இவ்வளவுதானோ மனத்துயர்
எண்ணும் பொதெல்லாம் எரிநரகாய் இதயத்தை வாட்ட
நெய்யிழந்த விளக்காய்க் கருகி நின்ற கண்ணீர்க் காவியம்
உயிரோடு உயிராய் நின்ற சுடர் சென்ற இடம் அறியாது
இருளில் வாடும் வண்ணம் கலைந்த ஓவியம்

நள்ளிரவில் கள்வனைப்போல் பிரிந்து சென்ற
காரணம் என்னவோ? அறியாத விடை பேதையைக் வாட்ட
காயும் பௌர்ணமி அன்று கூடிக்களித்த இன்பத்தைச் சொல்ல
இன்றோ கனவாய்க் கலைந்து துன்பத்தில் மனம் துவள
மனைவியும், தாயுமானவள் மனங்கலங்கி நின்றாள்.

ஒருயிரும் ஈருடலுமாய் வாழ்ந்த வாழ்வு
மண்ணும், மழை நீருமபோல் இரண்டறக் கலந்த உறவு
விடை கேட்டிருந்தால் சென்று வருக
வென்று வாழ்க என்று வாழ்த்தியிருப்பேன்
வருக என்று அழைத்திருந்தால்
வாழ்நாள் முழுவதும் அடிமைபோல் அன்புப் பணிசெய்து
சேவகியாய் காலடியில் கிடந்திருப்பேன்





தாயானதால் தவிக்கவிட்டீரோ?
தாயுமிவள் துன்பப்பட வேண்டாமெனறோ
தனியாய் சென்றீரோ? நெஞ்சு புலம்பிட
நிம்மதியன்றித் தவித்தாள் யசோதரா

வளர்ந்தும் தேய்ந்தும் வான் நிலா கழிந்துபோக
தேரோட்டியின் சேதியினால் தேடலின் காரணம் தெரிந்து போக
சித்தார்த்தும் புத்த நிலையடைந்த சேதி-ஆறாண்டு கழித்து
மனதைச் சேர உவகையால் பூரித்த உத்தமி

இளமை பொய்-அழகு பொய்-இளமையும் அழகும்
மெய் எழுதும் பொய்க் கோலங்களே-தோன்றி மறையும் நீர்க்குமிழிகளே
மூப்பு-பிணி –சாவு வந்தே தீரும் -இதுவே வாழ்வின் நியதி
முப்பிணிக்கு அருமருந்து கண்ட உள்ளம் மகிழ
நாடுகள் தோறும் நற்செய்தி நவில-செந்தாமரையைச்
சூழந்த மதுகாரிகளாய் பெருமானைச் சூழ்ந்த மக்கள்

மாலையிட்டவரும் மனம் மாறலாம்-மனையாளையும்
பிள்ளையையும் கைவிட்டு வேறு வழி போகலாம்
பிறந்தவனும் தந்தைக்கு தளையாகலாம்
“இராகுல்” எனப் பெயர் சூடலாம்



ஆசையும் அறியாமையும் துன்பத்திற்கே வழிகோரும்
மாறும் உலகம் வெறும் மாயையே-அன்பைச் சிவமாக்கி
வாழ்வைத் தவமாக்கி தாயிவள் தன் தேடலைத்
தன்னுள் தேடினாள், வாழ்வை தியானமாக்கி
ஆணவமழியத் தேடிய மங்கை ஞான கங்கையாய் மாறினாள்

பொன்னணி களைந்து-பூவணி துறந்து வெண்ணாடை அணிந்தவள்
மஞ்சளும் குங்குமமும் மறுத்தே பஞ்சணையும் துறந்தாள்
பரிமளவர்க்கமும் நறுமண தைலங்களும்
அறுசுவை உண்டிகளும் துறந்தே அறவழி நின்றாள்

கண்மணி இராகுலிற்கு கடமைகள் புரிந்து
இன்சொல்லும் பணிவிடையும், ஏழையர்க்குத் தொண்டுமாய்
மனப்பிணி நீங்க-விழிப்புணர்வோடு
கண்ணாளனை பிரிந்த பொன்மணி இவளும்
நாளும் தியானத் தவமிருந்தாள்.






வாழ்நாள் துணைவன் வழிமாறிய பயணத்தில்
உலகுய்ய வழிகண்டார் என்ற சேதி
காதில் தேனை வார்க்க-தேடி வருகின்றார்
தேவி பெருமான் உன்னை என்ற சேதி
பொங்கும் புதுப்புனலாய் நெஞ்சில் பாய
கடல் கலக்கும் நதியைப்போல் நெஞ்சு தவித்திட-
கமலக் கண்ணண் முகம் காணக் காத்திருந்தாள் தேவி

ஆண்டுகள் பல போனனபின்-அண்ணலும் நோக்கிட
அவளும் நோக்கிட-அழகிய சந்திப்பில்
மங்கை விழிகளிலோ கங்கை-மாதவன் விழிகளிலோ கருணை

மழித்த சிரசு மணிமுடியைப் பழிக்க
ஏந்திய பிக்ஷா பாத்திரம்-செங்கோலை இகழ
உள்ளொளியின் நெருப்பாய் நின்ற சீவர ஆடையோ
வெற்று உடல் மூடிய பகட்டு ஆடம்பரங்களைப் பரிகசிக்க
கருணை ததும்பும் முகமும், ஞான ஒளி சிந்தும் தேஜஸீமாய்
போதிசத்துவர் தரிசனம்
வாழ்வு துக்கமெனக் கண்டவர்-துக்கத்தின் உற்பத்தி
துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் கண்டவர்

உலகுய்ய-பஞ்ச சீலத்தையும், அட்டாங்க மார்க்கத்தையும்
தம்மபதத்தையும், திரிபீடகத்தையும் அளித்த கருணைவள்ளல்
சீவர ஆடையில் செஞ்சூரியனாய்த் தரிசனம் தந்தார்.


வந்தவரும், பிரிந்தவரும் ஒன்றெல்ல எனக் கண்டாள்
கூப்பிய கரங்களும் குவளை விழிகளும் தொழுது பணிந்திட
பனித்த விழிகளில் பூத்த கண்ணீர் பாதம் கழுவிப் பூஜை செய்திட
மனம் நெகிழ்ந்த பெருமான் புத்தர்



உலகம் சுற்றி-உடலை வருத்தி உலகு அறியாத
ஞானப் பெருநிலையை தேடிக் களைத்தபின்
ஓய்ந்து மௌனத்தில் நின்று தியானத்தில் நிலைத்து
போதி மரத்தடியில் தன்னுள் கண்டவர்
தன்னுள் சென்று-தன்னைக் கடந்து-தன்னுள்ளே-
தன்னை கண்டவளையும் கண்டாள் களிப்படைந்தார்

''நீயே உனக்குச் அரண்''-தர்மமே ஆதாரம்
தர்மமே உனக்குச் சரண்-விழிப்பாயிரு
உன்னுள் நீ தேடிகண்டாய் -உலகலைந்து-நானழிய-
என்னுள் நான் தேடிக் கண்டேன் ஞானம் பெற்றேன்''
''அன்னையே உன் தவம் பெரிது''போற்றிய போதிசத்துவர்

போதிவிருட்சங்களும் பௌர்ணமி நிலவும்-சித்தார்த்தர்
புத்த நிலையடைந்ததைப் பறை சாற்ற
கண்ணாளனின் பிரிவும்-காதற் சிலுவையும்
யசோதரா ஞானமடைந்தற்கு சான்றானது





இந்தப் பெண் புத்தர்களை-உலகம் காணபதில்லை
போற்றி புகழ்வதுமில்லை-இது
ஞானிகள் மட்டுமே காணும் ஞானப் பெருநிலை
பெருமான் புத்தர் கண்டார் உவகைகொண்டார்.

ஆணவம் கழித்த தூய மனமே-புத்த நிலை- நிர்வாண நிலை
விழிப்புணர்வில் நின்று தம்மை அறிந்தவரே
புத்த நிலையடைகின்றார்-மற்றவரோ
சம்சார பந்தத்தில் மூழ்கித் தவிக்கின்றார்.
புத்த நிலையின் வித்து நாமே-அகமகிழுங்கள் மானிடரே
வித்து மடிந்திட விருட்சம் எழுந்திடும்
(If you happened to meet Lord Buddha on the street, kill HIM)
சப்பே தத்தா பவங்க துதி தத்தா
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-08-04-2023